# Media Cell

**OBJECTIVE**

- This Cell is responsible for handling PR activities of the college. It caters to the three major domains of the institute including Public Relations, Website and Facebook Page Management and Official Newspaper / Newsletter of the institute.
- The Cell manages the media relations of the institute and keeps the media updated with the happenings at the institute. This primarily involves covering various events of the college, writing press releases, taking photographs and ensuring that each and every event of the college gets its due media coverage.
- The Cell provides content for periodic updating of the college website. Also the official Facebook page of college is managed by this cell.

The Cell also organizes various interesting events at the institute festival as well as during the academic session such as Orientation Program, Induction Program and Various such activities.



விழாவில் சர்க்கரை பொங்கலிட்டு மகிழ்ந்த மாணவ, மாணவிகளை படத்தில் காணலாம்.

ஆமத்தூர் ஏ.ஏ.ஏ. பொறியியல் கல்லூரியில்

**தமிழர் திருநாள் தைப்பொங்கல் விழா கோலாகலம்**

**சர்க்கரை பொங்கலிட்டு மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர்**

விருதுநகர், ஜன.11—

விருதுநகர் ஆமத்தூர் ஏ.ஏ.ஏ. பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் விழா பாரம்பரிய உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு கல்லூரி முதல்வர் சேகர் தலைமை தாங்கி விழாவை தொடங்கி வைத்தார்.

விழாவில் ஒவ்வொரு துறை சார்ந்த பேராசிரியர்கள், மாணவ மாணவியர்கள் அனைவரும் கலந்து கொண்டு சர்க்கரைப் பொங்க லிட்டு மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர். மாணவ, மாணவிகளுக்காக கோலப்போட்டி, வண்ணம் தீட்டுதல் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடைபெற்றன. தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டுகளுள் ஒன்றான சிலம்பாட்டத்தை கல்லூரி மாணவ, மாணவி கள் அரங்கேற்றி பார்வையாளர்களை மெய்சிலிர்க்க வைத்தனர். தொடர்ந்து கிராமிய நடனங்களை ஆடி விழாவிற்கு மேலும் உற்சாகம் சேர்த்தனர்.

மேலும், ஆசிரியர்களுக்கென கயிறு இழுத்தல், பானை உடைத்தல் போன்ற பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இவ்விழா தமிழரின் பண்பாடு மற்றும் பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் வகையில் ஆடல், பாடல் மற்றும் வீர விளையாட்டுகளுடன் பொங்கல் விழா அமைந்தது. விழாவில் மாணவ மாணவிகள் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இவ்விழாவின் ஏற்பாடுகளை பேராசிரியர் செந்தில் மகாராஜ் செய்திருந்தார்.

# மாவட்டம்



ஆசிரியர் மேம்பாட்டு திட்ட பயிற்சியில் கலந்து கொண்டவர்களை படத்தில் காணலாம்.

### ஏ.ஏ.ஏ. பொறியியல் கல்லூரியில்

## ஆசிரியர் மேம்பாட்டு திட்ட பயிற்சி வகுப்பு

விருதுநகர், டிச. 28—

ஆமத்தூர் ஏ.ஏ.ஏ. பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் ஆராய்ச்சி மற்றும் படைப்பாற்றல் துறை சார்பில், ஆசிரியர் மேம்பாட்டு திட்டத்திற்கான பயிற்சி வகுப்புகள் 5 நாட்கள் நடைபெற்றது. இப்பயிற்சி வகுப்புகள், ஏ.ஏ.ஏ. பொறியியல், தொழில்நுட்ப கல்லூரி, தேசிய தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் இணைந்து, புதுமையான கற்பித்தல் மற்றும் கற்றல் வழிமுறைகள் என்ற தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டது.

நிகழ்ச்சியை கல்லூரி முதல்வர் சேகர் தொடங்கி வைத்தார். ஆராய்ச்சி மற்றும் படைப்பாற்றல் துறையின் தலைவர் தேவபாலன், இத்தொழில்முறை வளர்ச்சி பயிற்சி வகுப்புகளின் முக்கியத்துவம் மற்றும் அதன் பயன்கள் குறித்து விளக்கினார்.

நிகழ்ச்சியில், சென்னை தேசிய தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறை தலைவர் பேராசிரியர் மல்லிகா, கல்வி ஊடகங்கள் மற்றும் தொழில்நுட்ப துறையின் பேராசிரியர் சுபா ஆகியோர் பங்கேற்று, தங்களின் அனுபவம் மற்றும் அறிவை பகிர்ந்து கொண்டு பயிற்சிகளை நடத்தினர்.

இந்த பயிற்சி வகுப்புகள், பேராசிரியர்களின் கற்பித்தல் திறன்களை மேம்படுத்த ஒரு சிறந்த கற்றல் மேடையாக அமைந்தது. புதுமையான கற்பித்தல் மற்றும் கற்றல் அணுகுமுறைகள் குறித்த இப்பயிற்சி, கல்வி ஊடகங்கள் மற்றும் தொழில்நுட்பத்தின் பயன்களை ஆழமாக புரிந்து கொள்ள பங்கேற்பாளர்களுக்கு உதவியது.

பயிற்றுநர்களின் அனுபவமிக்க வழிகாட்டுதல், கல்வி செயல்பாடுகளில் தொழில்நுட்பத்தை திறம்பட ஒருங்கிணைக்கும் புதிய பார்வையையும், நடைமுறை திறன்களையும் வழங்கியது.

இந்நிகழ்ச்சியில் பல்வேறு துறை சார்ந்த 40 பேராசிரியர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஆராய்ச்சி மற்றும் படைப்பாற்றல் துறை தலைவர் தேவபாலன் மற்றும் கணினி அறிவியல் துறை பேராசிரியர் மீனாட்சிசுந்தரம் ஆகியோர் செய்திருந்தனர்.



### விருதுநகர் ஏ.ஏ.ஏ. பொறியியல் கல்லூரி

## மாணவ, மாணவிகள் விழிப்புணர்வு நடை பயணம்

விருதுநகர், நவ.13—

இந்திய அரசு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம் சார்பில், சர்தார் வல்லபாய் படேல் பிறந்த நாளை முன்னிட்டு நாடு முழுவதும் தேசிய ஒற்றுமை தின விழிப்புணர்வு நடை பயணம் நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக, மேரே யுவா பாரத் கேந்திரா, விருதுநகர் சார்பில் ஆமத்தூர் ஏ.ஏ.ஏ பொறியியல் கல்லூரி முன்பாக விழிப்புணர்வு நடை பயணம் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட இளைஞர் அலுவலர் ஞானச்சந்திரன் வரவேற்றார். முன்னதாக சர்தார் வல்லபாய் படேல் உருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. மை பாரத் கேந்திராவின் முன்னாள் மாநில இயக்குனர் சடாச்சரவேல் உறுதிமொழி ஏற்று, கொடியசைத்து இந்நிகழ்வினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் ஏ.ஏ.ஏ. கல்லூரி முதல்வர் சேகர், மாவட்ட விளையாட்டு அலுவலர் குமர மணிமாறன், சமுதாய நல அலுவலர் ராஜ்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நடைப்பயணம் கல்லூரியில் இருந்து தொடங்கி 8 கிலோமீட்டர் தூரம் நடைப்பயணம் மேற்கொண்டு ஆமத்தூர் பேருந்து நிலையத்தில் நிறைவு பெற்றது. இந்நிகழ்வில் ஏ.ஏ.ஏ. பொறியியல் கல்லூரி மாணவ, மாணவிகள் உட்பட சுமார் 600— க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.





### சிவகாசி ஏ.ஏ.ஏ. பொறியியல் கல்லூரியில்

## மாணவர்களுக்கான ஹேக்கத்தான் போட்டி

சிவகாசி, நவ.9—

சிவகாசி ஏ.ஏ.ஏ. பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, நாசா ஸ்பேஸ் ஆப் விருதுநகர் இணைந்து பொறியில் கல்லூரி மாணவர்களுக்கான ஹேக்கத்தான் போட்டியை நடத்தியது.

கடந்த இரண்டு மாதங்களாக பல்வேறு சுற்றுகளாக நடத்தப்பட்ட இந்த போட்டியில் பல்வேறு பொறியியல் கல்லூரிகளில் இருந்து மாணவ மாணவிகள் கலந்து கொண்டு, தங்களுடைய கண்டுபிடிப்புகளை சமர்ப்பித்தனர்.

இந்த போட்டியின் நிறைவு பகுதியாக செலிப் ரேஷன் ஆப் சக்சஸ் எனும் தலைப்பில் இறுதிப்போட்டி ஏ.ஏ.ஏ. பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் வெற்றிபெறும் அணிகள் குளோபல் சேலஞ்சு எனப்படும் உலக அளவிலான போட்டிகளுக்கு தமிழகம் சார்பில் பங்கேற்பார்கள். இந்த போட்டியில் கலந்து கொள்ள, முந்தைய சுற்றுக்களில் வென்று, தகுதி பெற்ற 12 அணிகள் கலந்து கொண்டன. கல்லூரியின் முதல்வர் சேகர் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். கணினி மற்றும் அறிவியல் துறையின் தலைவர் ஹேமலதா போட்டியை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் சுபா பாண்டியன் பேசினார். இந்த போட்டியின் நிறைவில் குளோபல் சேலஞ்சாக தேர்வு செய்யப்பட்ட மூன்று அணிகளில் ஏ.ஏ.ஏ. பொறியியல் கல்லூரியைச் சார்ந்த மாணவர் அணியும் ஒன்றாகும். மேலும் நிகழ்ச்சியின் ஒருங்கி ணைப்பாளர் ஜெயஹரி பிரபு, விக்னேஷ்வரன் மற்றும் அவரது குழுவினர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்கிருங்கனர்.




ஏ.ஏ.ஏ. பொறியியல் கல்லூரியில் மாணவர்களுக்கான முதல் தமிழ் நிரலாக்கப் போட்டி நடைபெற்றது.

### ஏ.ஏ.ஏ. பொறியியல் கல்லூரியில்

## தமிழ் நிரலாக்கப் போட்டி

விருதுநகர், அக்.18—

விருதுநகர் ஏ.ஏ.ஏ. பொறியியல் கல்லூரியின் அறிவியல் மற்றும் மானுடவியல் துறை மற்றும் அமெரிக்காவின் தமிழ் அநிதம் நிறுவனம் இணைந்து பொறியியல் மாணவர்களுக்கான முதல் தமிழ் நிரலாக்கப் போட்டி 4 சுற்றுகளாக நடைபெற்றது.

இவ்விழாவிற்கு கல்லூரியின் முதல்வர் சேகர் தலைமை தாங்கினார். தமிழகத்தின் பல்வேறு பொறியியல் கல்லூரிகளில் இருந்து 75 அணிகள் கலந்து கொண்டன.

இந்த நுழைவுப் போட்டி நேரிலும் இணையம் வழியாகவும் நடந்தது, அதில் தேர்வு செய்யப்பட்ட அணிகள் இரண்டாம் மூன்றாம் சுற்றுகளில் இணைய வழி மூலமாக கலந்து கொண்டனர். பல்வேறு கல்லூரிகளில் இருந்து தமிழ் பேராசிரியர்களும் கணினித் துறை பேராசிரியர்களும் நடுவர்களாக பங்கேற்றனர், இரண்டாம் சுற்றில் 35 அணிகளும் 3—ம் சுற்றில் 20 அணிகளும் கலந்து கொண்டன. இறுதி சுற்றில் எட்டு அணிகள் கலந்து கொண்டன.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அவர்களின் தமிழ் கணிமையை ஊக்குவிக்கும் வண்ணம் பரிசுத்தொகைகளையும் பரிசுகள் கோப்பையும் கேடயமும் நிறுவனம் தமிழ் அநிதம் அமெரிக்கா நிறுவனம் வழங்கி சிறப்பித்தது. செட்டிநாடு என்ஜினீயரிங் கல்லூரி மற்றும் டெக்னாலஜி கல்லூரியின் சார்பாக கலந்து கொண்ட மாணவர்கள் முதல் பரிசாக ரூ.10,000 ரொக்கமும், சிவ் நாடார் யூனிவர்சிட்டி கல்லூரியின் சார்பாக கலந்து கொண்ட மாணவர்கள் இரண்டாவது பரிசாக ரூ.5000 ரொக்கமும் மற்றும் லோயோலா இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலஜி அண்ட் சயின்ஸ் கல்லூரி மாணவர்கள் 3—வது பரிசாக ரூ.3000 ரொக்கமும் பெற்றனர்.

நிகழ்ச்சியில் கல்லூரி பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.